

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## மானியக்கோரிக்கை எண் - 34

### புதிய அறிவிப்புகள்
### 2011 - 2012

## இதர குடிநீர் வழங்கல் திட்டங்கள்

**16.** தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் போதிய அளவு குடிநீர் வழங்க அரசு உறுதி பூண்டுள்ளது. இந்த உயரிய இலக்கினை அடைய மாநிலம் முழுவதும் உள்ள பொதுப் பணித் துறை, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான 39,000 ஏரிகளை தூர்வாரி புனரமைப்பு செய்து மழை நீரை சேகரித்து முழு கொள்ளளவிற்கு உயர்த்த தனிச் சிறப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு இவ்வாண்டு முதலே பணி துவக்கப்படும்.

**17.** கணினி மூலம் தகவல் அறிந்து மற்றும் கண்காணித்துக் குடிநீர் உட்கட்டமைப்புகளை கட்டுப்படுத்தும் திட்டம் (SCADA) சேலம் மாவட்டத்திலுள்ள இருப்பாளி மற்றும் 1161 வழியோரக் குடியிருப்புக்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் காடையாம்பட்டி மற்றும் 920 குடியிருப்புக்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில், ரூபாய் 3.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**18.** தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுக் குடிநீர் திட்டங்களில் பயன்பெறும் அனைத்து பயனாளிகளுக்கும் முழுமையான அளவு குடிநீர் வழங்கத் தேவையான புனரமைப்புப் பணிகள் 19 மாவட்டங்களில், 72 கூட்டுக் குடிநீர் திட்டங்களில் ரூ. 73.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

19. தமிழகத்தில் தாமிரபரணி, பெரியாறு–வைகை, சின்னாறு, தென்பெண்ணையாறு, மற்றும் கொசத்தலையாறு போன்ற முக்கிய ஆறுகளில் திருநெல்வேலி, இராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், திருவள்ளூர், விழுப்புரம், தருமபுரி, மற்றும் கிருட்டிணகிரி மாவட்டங்களில் அமையப்பெற்றுள்ள 55 கூட்டுக் குடிநீர் திட்டங்களின் இயக்கத்தில் இருக்கும் 132 நீர் உறிஞ்சு கிணறுகள் அதிகப்படியாக மணல் எடுத்ததால் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட நீர் உறிஞ்சு கிணறுகளைச் சுற்றிப் புனரமைப்புப் பணிகள் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**20.** குறைந்த நேர மின் இருப்பு மற்றும் குறைந்த அளவு மின் அழுத்தம் காரணமாக போதுமான அளவு குடிநீர் வழங்க இயலாத 2 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு தனி மின் பாதைகளும் மற்றும் 4 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு 4ஆவது கம்பி இணைப்புகளும் அமைக்க ரூ.14.93 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**21.** தேனி மாவட்டத்தைச் சார்ந்த தேனி அல்லி நகரம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் வைகை அணையினை நீராதாரமாகக் கொண்டு சுமார் 1 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நடப்பு நிதியாண்டில் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**22.** கடலூர் மாவட்டத்தைச் சார்ந்த கடலூர், விருத்தாச்சலம் நகராட்சிகள், 9 பேரூராட்சிகள் மற்றும் 9 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1300 ஊரகக் குடியிருப்புகள், விழுப்புரம் மாவட்டத்தைச் சார்ந்த உளுந்தூர்பேட்டை, திருவெண்ணைநல்லூர் பேரூராட்சிகள் மற்றும் 4

ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 525 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு சுமார் 16.42 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் நடப்பு நிதியாண்டில் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

23. புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த புதுக்கோட்டை, விராலிமலை, அன்னவாசல், பொன்னமராவதி, குண்ணான் டார்கோயில், திருமயம், அரிமளம், கந்தர்வக்கோட்டை, அறந்தாங்கி, கரம்பக்குடி, திருவரங்குளம் ஒன்றியங்களைச் சார்ந்த 3557 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த எஸ். புதூர், கல்லல் மற்றும் சாக்கோட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 127 ஊரகக் குடியிருப்புகள் பயனடையும் வகையில் காவிரி மற்றும் கொள்ளிடம் ஆற்றினை நீராதாரங்களாகக் கொண்டு சுமார் 12.27 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நடப்பு நிதியாண்டில் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**24.** கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த ஜமீன் ஊத்துக்குளி பேரூராட்சி, பொள்ளாச்சி வடக்கு, மற்றும் தெற்கு ஒன்றியங்களைச் சார்ந்த 63 ஊரகக் குடியிருப்புகள் பயனடையும் வகையில் ஆழியார் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு சுமார் 30,000 மக்கள் பயனடையும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நடப்பு நிதியாண்டில் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**25.** திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த குடிமங்கலம், உடுமலை ஒன்றியங்களைச் சார்ந்த 126 ஊரகக் குடியிருப்புகள் பயனடையும் வகையில் திருமூர்த்தி அணையினை நீராதாரமாகக் கொண்டு சுமார் 81,000 மக்கள் பயனடையும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நடப்பு நிதியாண்டில் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**26.** திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த பாப்பாக்குடி (பகுதி), கீழப்பாவூர், ஆலங்குளம், மானூர் மேலநீலிதநல்லூர், சங்கரன்கோவில் ஒன்றியங்களைச் சார்ந்த 152 ஊரகக் குடியிருப்புகள் பயனடையும் வகையில் தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு சுமார்

1.31 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நடப்பு நிதியாண்டில் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**27.** திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த பாப்பாக்குடி (பகுதி), மற்றும் கடையம் ஒன்றியங்களைச் சார்ந்த 138 ஊரகக் குடியிருப்புகள் பயனடையும் வகையில் தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு சுமார் 0.76 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நடப்பு நிதியாண்டில் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**28.** தூத்துக்குடி மாவட்டத்தைச் சார்ந்த உடன்குடி பேரூராட்சி மற்றும் 12 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 319 ஊரகக் குடியிருப்புகள் பயனடையும் வகையில் தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு சுமார் 1.72 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நடப்பு நிதியாண்டில் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பாதாளச் சாக்கடை திட்டம்

**29.** அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்தப்படும். ஏற்கனவே இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட நகரங்களில் உள்ள விடுபட்ட பகுதிகளில் முதலில் இத்திட்டம் செயல் படுத்தப்படும். ஸ்ரீரங்கம் உட்பட திருச்சி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டம் ரூ.328 கோடி செலவில் உடனடியாக செயல்படுத்தப்படும்.